**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC.301/2023 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.4 |
| Name : | மருத்துவர். பூஷணா |
| Father's/Husband Name: | செந்தில்வேல் |
| Village : | அரசு தலைமை மருத்துவமனை பெரம்பலூர் |
| Taluk : | பெரம்பலூர் |
| Age : | 45/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 22.07.2026

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**(எதிரிகள் 1 முதல் 5 வரை ஆஜர் இல்லை. அவர்களுக்காக கு.வி.மு.ச.317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது ).**

**முதல் விசாரணை :–**

நான் தற்போது பெரம்பலூர் அரசு தலைமை மருத்துவமனையில் முதுநிலை உதவி மருத்துவராக பணியில் இருந்து வருகிறேன். கடந்த 04.12.2022ம் தேதி அன்று காலை 9 மணிக்கு பணியிலிருந்த போது கனகம் என்பவரை பானு என்பவர் சிகிச்சைக்காக அழைத்து வந்தார்.

அவரை மருத்துவ விசாரணை செய்த போது அன்றைய தினம் காலை 8 மணியளவில் அடையாளம் தெரிந்த 3 பெண் நபர்கள் அவருடைய வயலில் வைத்து அவரை குச்சியால் தாக்கி நாயை அவிழ்த்து விட்டு கடிக்க வைத்ததாக கூறினார்.

அவரை பரிசோதனை செய்த போது

1. வலது தொடை பகுதியில் 3x0.2 செ.மீ அளவில் சிதைந்த காயம் காணப்பட்டது.

2. அவருடைய வலது கையில் மேல்பகுதியில் சிராய்ப்பு காயம் 3 செ.மீ அளவில் காணப்பட்டது.

3. தலையில் வலி இருப்பதாக சொன்னார்.

அவரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்தேன். அவருக்கு நாய்க்கடித்தற்கான ARV ஊசி செலுத்தப்பட்டது. தலைக்கு CT Scan எடுத்து பார்த்ததில் நல்ல நிலையில் இருந்ததாக சான்று அளிக்கப்பட்டது. இவருக்கு ஏற்பட்ட காயமானது சாதாரண காயம் என சான்று வழங்கினேன். நான் கனகத்திற்கு **வழங்கிய விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்றிதழ் அ.சா.ஆ2 மற்றும் அ.சா.ஆ3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

மேலும், அதே சம்பவத்தில் காயமடைந்ததாக 54 வயதுடைய சுப்ரமணி என்பவரை பானு என்பவர் 04.12.2022ம் தேதி காலை 9.05 மணிக்கு சிகிச்சைக்காக அழைத்து வந்தார். அவரை விசாரணை செய்த போது அடையாளம் தெரிந்த 3 ஆண் நபர்கள் அவருடைய வயலில் வைத்து அன்றைய தினம் காலை 8 மணிக்கு கைகளால் தாக்கியதாக கூறினார்.

அவரை பரிசோதனை செய்த போது வெளிக்காயங்கள் எதுவும் இல்லை. அவரை வெளிநோயாளியாக சிகிச்சை வழங்கினேன். அவருக்கு ஏற்பட்ட காயமானது சாதாரண காயம். சுப்ரமணிக்கு நான் வழங்கிய **விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்றிதழ் அ.சா.ஆ4 மற்றும் அ.சா.ஆ5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் பணியில் இருந்ததற்கான வருகைப்பதிவேடு நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை ஆனால் மருத்துவமனையில் தான் அதை பராமரித்து வருவார்கள். கனகம் என்பவருக்கு நாய்க்கடித்தற்கான காயங்கள் இருந்ததா என்றால் இருந்தது. காயம்பட்ட இரு நபர்களுக்கும் ஏற்பட்ட காயமானது சாதாரணமாக கீழே விழுந்தாலும் மேற்கண்ட காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது. போலிசார் எத்தனை முறை என்னை விசாரணை செய்தார்கள் என்றால் ஒரு முறை.

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.